# 10. ஊரக வீட்டு வசதி

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக உறைவிடம் கருதப்படுகிறது. கிராமப்புறங்களில் முறையான வீட்டு வசதியற்றோருக்கு வீட்டு வசதி அளிக்கும் பொருட்டு செயல்படுத்தப்படும் திட்டங்களில் அரசாணை (நிலை) எண்.340, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 3.12.97-ல் மூலம் (அ) ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோர்க்கு வீட்டுமனை ஒதுக்கிடும் திட்டம், தமிழ்நாடு ஊரக வீட்டு வசதித் திட்டம், ஊரகப் பகுதிககளில் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம், பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கான வீட்டு வசதித் திட்டம் ஆகிய திட்டங்களின் பயனாளிகளைக் கண்டறிதல், பொறுப்பினை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) மேற்கண்ட திட்டங்களில் தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறிவதில் கிராம ஊராட்சிகளுக்கு உதவுதல் மற்றும் பணியினை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல் போன்ற பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) மேற்கண்ட திட்டங்களுக்கான திட்டங்களை மாவட்ட அளவில் தீட்டுதல் மற்றம் திட்டங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்யும் பொறுப்புக்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புக்கள் வழங்க ஆராய்ந்த குழு கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. வீடு இல்லாதவர்களுக்கு வழங்கப்படக்கூடிய வீட்டுமனைகள் மற்றும் ஊரக வீட்டு வசதி திட்டங்களின் கீழ் வழங்கப்படக்கூடிய வீடுகளுக்கான ஒட்டுமொத்த தேவையை கணக்கிட்டு விவரங்களை பராமரித்தல்.

2. வீட்டு மனைகள் / வீடுகள் கட்டத் தகுந்த நிலங்களைக் கண்டறிந்து அதன் விவரத்தை பராமரித்தல்.

3. வீடு கட்டுவதற்கான மனைகளை பகிர்ந்தளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல்.

4. ஊரக வீட்டு வசதியில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் பிற வீட்டு வசதி திட்டங்களின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சமுதாயத்தின் பிற நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டு வசதி திட்டங்களில் தகுதியுள்ள பயனாளிகளை தேர்ந்தெடுத்தல்.

5. ஊரக வீட்டுவசதியை மேம்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகன் மற்றும் தனியார் வீடு கட்ட உதவுதல்.

6. மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிட்டு தேவையான அறிவுரைகளை வழங்குதல்.

7. கைத்தறி நெசவாளர்களுக்கான சிறப்பு வீட்டு வசதித்திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் வீடு கட்ட பயனுள்ள மனைகளை கண்டறிந்து, கையகப்படுத்தி முறையாகப் பகிர்வு செய்தல்.

2. ஊரக வீட்டுவசதி திட்டங்களின் செயல்பாட்டுக்கு வழிகாட்டி தேவையான தொழில் நுட்ப உதவியை, கிராம ஊராட்சிகளுக்கு அளித்தல். ஊரக வீட்டு வசதிக்காக பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டுமானத்திற்காக கட்டிடப் பொருட்கள் வழங்குதல். ஊரக வீட்டு வசதி திட்டங்களை திறம்பட செயல்படுத்த ஆய்வுக் குழுக்களை அமைத்து, அதன் செயலை மேற்பார்வையிடல்.

3. ஊரக வீட்டுவசதி திட்டங்களின்செயல்பாடுகள், சிறப்பான முறையில் நடைபெற தொடர்ச்சியான மேற்பார்வை செய்தல் , கட்டுமானப் பணிகளின் தரத்தினை மேற்பார்வை செய்து, ஆய்வு மேற்கொள்ளல். மேலும் ஊரக வீட்டு வசதிக்கான பல்வேறு வகையான திட்டங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் செயல்படுத்துதல்.

4. மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டம் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கான வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என்பதை மேற்பார்வையிட்டு தேவையான ஆலோசனைகள் வழங்குதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. தங்கள் மாவட்டத்தில், ஊரக வீட்டு வசதிக்கான திட்டங்கள் தீட்டும்போது அம்மாவட்டத்தின் ஊரக வீட்டு வசதி எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, திட்டமிடுதல். மாவட்டத்திலுள்ள அனைவருக்கும் ஒரு வீடு என்ற கொள்கையளவில் ஒருங்கினைந்த திட்டம் ஒன்றை தயாரித்து பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் செயலாக்க நடவடிக்கைகள் எடுத்தல். மாவட்டத்தில் ஊரக வீட்டு வசதியின் கீழ் கட்டிடங்கள் கட்ட ,கட்டிட மையத்தின் தொழிற்நுட்ப ஆலோசனைகளைப் பெறுதல். மேலும், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்.
2. மாவட்ட ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் ஊரக வீட்டு வசதி திட்டங்களின் செயல்பாடுகள், மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு தக்க அறிவுரைகள் வழங்குதல்.

3. மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டங்கள் மற்றும் கைத்தறி நெவாளர்களுக்கான திட்டங்களை மாவட்ட அளவில் உருவாக்குதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.